32. கண்ணுளா பண்ணுளா காற்றா கடனுஞ்ச
முனைனுளா வுண்மை யுரையாளா - மண்ணுளா
வோய்வினையா னெந்தே னுளம்வெதுப்பா யென்றுசொலித்
தீவினையை யப்புவியிற் சிந்து.

33. சிந்தைதனிற் றோன்றுஞ் சிதாகாச சின்மயத்தைப்
பந்தமற நீமனமே பற்றுவையேல் - முந்தை
வினையெல்லாம் வெந்தோட வேரோடும் வீழ்த்
தனையொப்பான் றட்சணைத் தால்

34 சரணஞ் சரணமெனச் சந்ததமுஞ் சான்றோர்
மரணம் பொருந்தா வண்ணங்க - சரணம்
பொறிமுதலாக தத்துவங்கள் பொன்னடியைப் போற்ற
வறிவிப்பான் றண்ணருளினால்.

35. அருளினா லையன்றா ளான்றோ ரறிவார்
தெருளினா லனறியே தேறா - மருளான
மயங்கும் வலாரிமுதற் றேவரெலாம வந்தே
யியங்கு நடராசனை யேத்து.

36. எந்தவுமே யான்மாக்க ளிஷ்டசித்தி யாவெல்லாங்
கோத்தலினாற் கிட்டியதோர் கொள்கைபோன் - மாத்துய
தங்கச் சிலையான சரணமுன னெண்ணத்திற் [ர்ந்த
சங்கை யறவேயுந் தான்.

37. தானதுவாய்த் தங்குந் தனிப்பரனைச் சங்கர
வானவெளி தீயப்பு மண்வாழ்வை - மோனகுரு
வானவரை யக்கநுதன் மானபினரை புண்ணியபி
மானமுட னேமனனே வாழ்த்து.

38. வாழ்த்துதற்கு வாயிருக்க மாயவாழ்க்கை யைவிட்டுப்
பாழ்த்தவர் மானைபிலரைப் பற்றுமற் - வாழ்க்க
பிறப்பறுக்கப் பிஞ்ஞகன்றன் பேர்ப்பீஜ விஞ்ஞைச
சிறப்பதனைச் சிந்தநீ தேடு.

88. வையத்தா வானத்தார் மற்றெவருங் காணுரே
யையத்தா ராகி யமர்ந்தானைச் - செய்யதத்தார்
பூண்டானை யென்பரவம் பூண்டானை யன்பருளப்
பூண்டானை யுள்ளும் பொருள்.

89. பொய்யா முளத்தார்க்குட் போந்து விளங்காமல்
மெய்யா முளத்தார்க்கு மேவன்பன் - செய்யாப்
பழியஞ்சி யென்னும்பேர் பண்டேற்ற னூன்றன்
பழியஞ்சி யென்னுனைப் பற்று.

90 அஞ்சன வண்ணத்தா னனுதினமு மஞ்சலிசெய்
தஞ்சனமை யென்று மதிபனையே - அஞ்சனஞ்சேர்
சீரபாடிச் சேர்ந்துமெய்ச் சேடனுடன ருஞ்சியுளான்
சீர்நாடிச் சிற்சபையைச் சேர்ந்து.

91. துதிப்பா யவன்புகழைச் சொல்வாயென் றென்றும்
மதிப்பாய் மலாததாண மறவாய் - சதிககே
நடமாடுந் துச்சனரை நாடாமன் மன்றி ன
னடமாடு காதனைநீ நமபு.

92. நம்பிரேறரைக் கைவிடான்காண் ணுவலூரின் னம்பியுபே
தம்பிரான் றேழனெனச சாற்றுமதை - நம்பியேதான்
வெள்ளஞ் சடையணியும் வெணபிறையோன் றட்கமல
முள்ளஞ் சடையநீ யோது.

93. ஓதாத வன்புகழை யோதத்துணிந் தெழுந்தாய்
கோதாரு வினபுன்மை கொண்டருளவான - தாதாரும்
பூத்தாரும் பைத்தாரும் புற்றாரும் பெமயானின்
பாத்தாருங் கொள்வான் பரிந்து.

94. பரியை நரியாக்கிப் பாண்டியன்றன் வாழ்வாம்
வரியைக் கரியாக்கி வந்தோரை - கிரியைநற் (ளின்
பொன்கில்லாப் போற்றலரைப் பொன்றுவிக்கும் புண்ணிய
புன்னில்லாக்கை கெடுப்பான் போற்று.

